[2005 பிப்ரவரி 2

வினா எண் 2, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர். (குறுக்கீடு)

திரு. லா. சந்தானம்: வைகை அணையில் தூர் வார அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தில் இருக்கின்ற அனைத்து அணைகளையும், ஏரி, குளங்களையும், அது கட்டி முடிக்கப்பட்டபோது என்ன கொள்ளளவு இருந்தது? தற்போது எந்த அளவிற்குக் கொள்ளளவு இருக்கிறது? பாசனத்தினுடைய நீரின் அளவு எவ்வளவு குறைந்திருக்கிறது என்பதனைக் கண்டறிய பொதுப் பணித் துறையின் மூலமாக நீண்ட ஆய்வு செய்வதற்கு உத்தரவு தரப்பட்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி முடிந்தவுடன், சபைக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திருமதி வி. அழகம்மாள், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

2—

கட்டட வசதி

•35920—திருமதி வி. அழகம்மாள்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி, கெங்கவல்லி வட்ட அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில்

2005 பிப்ரவரி 2]

இன்னமும் கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகம் உள்பட 14 வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டுமே கட்டப்படவேண்டும். இவை 12—வது நிதிக் குழுவின் மானியத்திலிருந்தோ, அல்லது பகுதி—2 திட்டத்தின்கீழோ, நிதிநிலைக்கேற்ப வருங்காலத்தில் கட்டி முடிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி. அழகம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கெங்கவல்லி வட்டம் 1997 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது. இதுநாள் வரையிலும் வட்டாட்சியர் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இல்லாமல், சமுதாய நலக் கூடக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதனை மீண்டும் பரிசீலனை செய்து, இந்த நிதியாண்டில் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 675, வருவாய்த் துறை, நாள் 25-7-1996-ன்படி, சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிய கெங்கவல்லி வட்டம் உருவாக்கப்பட்டது. கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகம் தற்போது கெங்கவல்லி பேரூராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு, கெங்கவல்லி வட்டம் வடக்கு கிராமம், புல எண் 68/1-ல் 1.42.0 எக்டேர் நிலத்தை நில மாற்றம் செய்வது அரசின் பரிசீலனையில் உள்ளது. கெங்கவல்லி வட்டாட்சியர் அலுவலகம் உள்பட சொந்தக் கட்டடங்கள் இல்லாத 14 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதியதாக சொந்தக் கட்டடம் கட்ட தலா ரூ.135 இலட்சம் வீதம், 12-வது நிதிக் குழு மானியத் தொகையிலிருந்தோ, அல்லது பகுதி-2 திட்டத்தின் கீழிருந்தோ, வருகின்ற நிதியாண்டுகளில் முன்னுரிமை கொடுத்துப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி வி. அழகம்மாள்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.